# தமிழ் நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044- 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை- 600 032.
முன்னிலை : முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ)

*******

முறையீட்டு மனு எண். 38/மா/2018

ஆணை எண். 116/2018

நாள் : 04/05/2018

**திருவாளர்கள் S.A. இஸ்பாணி (Ispahani),
மற்றும் S.M.இஸ்பாணி
ஆகியோரின் முகவர் திரு P.கேசன், – முறையீட்டு மனுதாரர்
சென்னை – 34.**

**உதவி வருவாய் அலுவலர்,
மண்டலம் – 5,
சென்னை மாநகராட்சி. – எதிர் மனுதாரர்**

சென்னை, எண்.123/124, நுங்கம்பாக்கம் பிரதான சாலை, இரண்டாவது தளம், இஸ்பாணி மைய (Ispahani Centrre) முகவரியில் வசிக்கும் திருவாளர்கள் S. A.இஸ்பாணி மற்றும் S.M இஸ்பாணி ஆகியோரின் முகவர் திரு P. கேசன் அவர்களின் 28.02.2018 நாளிட்ட முறையீட்டு மனு இம்முறைமன்ற நடுவத்தில் பெறப்பட்டு 38/018 எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் மனு பரிசீலிக்கப்பட்ட் கீழ்காணும் ஆணை வெளியிடப் படுகிறது :-

## ஆணை

சென்னை, எண்.123/124, நுங்கம்பாக்கம் பிரதான சாலை, இரண்டாவது தளம், இஸ்பாணி மைய (Ispahani Centrre) முகவரியில் வசிக்கும் திருவாளர்கள் S. A.இஸ்பாணி மற்றும் S.M இஸ்பாணி ஆகியோருக்கு, சென்னை அண்ணாசாலையில் 9/35 எண்ணிட்ட கட்டடம் உள்ளதென்றும், அக்கட்டடம் கட்டி முடிக்கப்பட்ட 2016–ஆம் ஆண்டு ஏப்ரல் திங்களிலிருந்து காலியாகவே உள்ளதெனவும் முறையீட்டு மனுதாரர் தெரிவித்துள்ளார். அக்கட்டிடத்திற்கு 2016–17–ஆம் ஆண்டு முதல் அரையாண்டிலிருந்து சொத்துவரிரூ.93,570/– என மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது என்றும் குறிப்பிட்டுள்ளார். பயன்படுத்தப்படாமல் காலியாக உள்ள அக்கட்டத்திற்கு, 1917 ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சி சட்டப்பிரிவு 105–ன் கீழ் குடியின்மைக்கான வரிக்குறைப்பு செய்யக்கோரி இம்முறைமன்ற நடுவத்தில் முறையீடு செய்துள்ளார்.

2. முறையீட்டு மனுதாரரின் முறையீடு சம்பந்தமாக சென்னை மாநகராட்சி, 5–வது மண்டல உதவி வருவாய் அலுவலரின் அறிக்கைப் பெறப்பட்டது. உதவி வருவாய் அலுவலர் தனது அறிக்கையில் முறையீட்டு மனுதாரரின் கோரிக்கைக் குறித்துக் கீழ்க்காணும் நிலையினை சுட்டிக்காட்டியுள்ளார் :-

> "Regarding vacancy remission it was stated that a properly cannot be treated as vacant merely because it is kept locked or empty and that the proper criterion is whether the empty property is kept ready for use or not. If it is kept ready for use, it cannot be said to be vacant. In this case, it has been reported that all the portions are ready for use. As such, no vacancy remission could b e given."

மேலும், குடியின்மைக்கான வரி குறைப்புக்கான கோரிக்கைக் குறித்து வரி மேல்முறையீட்டு தீர்ப்பாயத்திற்கு முறையீடு செய்யாமல் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தை நாடியுள்ளதையும் குறிப்பிட்டுள்ளார்.

3. முறையீட்டு மனுதாரரின் முகவர் திரு P.K.கேசன் அவர்களிடம் 02.05.2018 அன்று விசாரணை மேற்கொள்ளப்பட்டு வாக்குமூலம் பெறப்பட்டது. குடியின்மைக்கான வரிகுறைப்புக் கோரிக்கைக் குறித்து தற்பொழுது வரி விதிப்பு மேல்முறையீட்டு தீர்ப்பாயத்தில் மேல்முறையீடு செய்துள்ளதை திரு P.K.கேசன் அவர்கள் விசாரணையின்போது உறுதி செய்தார். மேலும், மேல்முறையீடு நிலுவையில் உள்ள நிலையில் ஐம்பது சதவிகித சொத்துவரியினை வலியுறுத்தி வசூலிக்கப்பட்டுள்ளது என்றும் குறிப்பிட்டார்.

4. தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் முறையீடு செய்துள்ளவருக்கு பிற தீர்வுகள் கிடைக்கத்தக்கதாக இருக்கும்பொழுது மற்றும் வழக்கின் சூழ்நிலையை நோக்கும் போது, அத்தகைய தீர்வினைப் பெறுவது முறையீடு செய்துள்ளவருக்கு அதிகப்படியான நலனைத் தரக்கூடியதாக இருக்கும் எனக் கருதும் நிலையில் அதனைப் பதிவு செய்து முறையீட்டு மனுதாரருக்குத் தெரிவிக்கலாம் என 2014–ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் சட்டப்பிரிவு 10(4) (c)-இல் குறிப்பிடப்பட்டுள்ளது. முறையீட்டு மனுதாரரின் கட்டிடத்திற்குக் குடியின்மைக்கான வரிகுறைப்புக் கோரிக்கைக் குறித்து ஏற்கனவே சென்னை மாநகராட்சி வரி மேல்முறையீட்டு தீர்ப்பாயத்தில் 28.03.2018 அன்று முறையீட்டினை தாக்கல் செய்துள்ளதாக அறிய நேரிடுகிறது. மனுதாரரின் கோரிக்கைக் குறித்து மேற்குறிப்பிட்ட தீர்ப்பாயம் மேற்கொள்ளப்படவுள்ள முடிவு, மனுதாரருக்கு அதிகப்படியான நலனைத் தரக்கூடியதாக அமையும் எனவும் இம்முறைமன்ற நடுவம் கருதுகிறது. எனவே, முறையீட்டு மனுதாரரின் கோரிக்கைக் குறித்து இம்முறைமன்ற நடுவம் எந்தவொரு முடிவினையும் மேற்கொள்ள இயலாது எனத் தெரிவித்து, அவ்வாறே முடிவு செய்து இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

2018–ஆம் ஆண்டு, மே திங்கள், 4–ஆம் நாளன்று, என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் ஆணையிடப்படுகிறது.

--//ஒப்பம்//--

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

**செயலாளர்.**

பெறுநர்

1. **திருவாளர்கள் S.A. இஸ்பாணி (மற்றும்)**
   **S.M.இஸ்பாணி, இஸ்பாணி மையம்,**
   **2–வது தளம், எண்.123/124, நுங்கம்பாக்கம் நெடுஞ்சாலை,**
   **நுங்கம்பாக்கம், சென்னை – 34.**

2. **உதவி ஆணையர் / உதவி வருவாய் அலுவலர்,**
   **மண்டலம் –5, சென்னை மாநகராட்சி,**
   **எண்.62, பேசின்பிரிட்ஜ் சாலை,**
   **பழைய வண்ணாரப்பேட்டை, சென்னை –21.**

3. **வரிமுறையீட்டு தீர்ப்பாயம்,**
   **சென்னை மாநகராட்சி,**
   **ரிப்பன் மாளிகை, சென்னை – 600 003.**

நகல் : **முறைமன்ற நடுவரின் நேர்முக எழுத்தர்,**
**பிரிவு அலுவலர்(நிர்வாகம்)**
**பேரூராட்சி பிரிவு –3,**
**இ.கோ. / உதிரிகள்**